Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.337/2020 Date:02.02.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | கோட்டைச்சாமி | Village | குச்சனுார் |
| Father/ Husband Name | பொன்னையா | Taluk | உத்தமபாளையம் |
| Age | 66/2026 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.02.2026 TIME 05.30 **PM**

1, 3 எதிரிகள் ஆஜரில்லை. 2ம் எதிரி வேறு வழக்கில் சிறையில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

21.06.2020ம் தேதி இரவு நான், எனது மனைவி புஷ்பவள்ளி, எனது மகன் முகிலன் ஆகியோர் வீட்டில் துாங்கிக்கொண்டிருந்தபோது, இரவு 11.30 மணியளவில் அருகில் இருந்த அறையில் துாங்கிக்கொண்டிருந்த எனது மனைவி அலறிக்கொண்டு வெளியே வந்தார். நான் எனது மனைவியிடம் விசாரித்தபோது, எனது மனைவியிடம் முகம் தெரியாத நபர் ஒருவர் எனது மனைவி கழுத்தில் அணிந்திருந்த தாலி செயினை அறுத்துவிட்டு, சென்றுவிட்டதாக கூறினார். அவர் அணிந்திருந்தது சுமார் 9 பவுன் தங்கதாலிச்செயின், அதில் சுமார் 2 பவுன் மதிப்பிலான தங்க பொருட்கள் கோர்க்கப்பட்டிருந்தது. போலிசாருக்கு தகவல் சொல்லி, போலிசார் உடனே வந்துவிட்டார்கள். மறுநாள் காலை 10.30 மணியளவில் சின்னமனுார் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 1 வாரம் கழித்து செயினை பறித்து சென்ற நபரிடமிருந்து செயினை கைப்பற்றி கொடுத்தார்கள். மேற்படி செயினை பறித்த நபர் குறித்து விசாரித்தபோது, ரமேஷ் என்று கூறினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால், குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.